## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

## அசல் வழக்கு எண் – 209/2006

**வாதி தரப்பு சாட்சி–2 சிவக்குமார் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 19.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | கிராமம் | கீழப்பகுதி கிராமம் |
| த/பெ / க/பெ. | ராஜலிங்கம் | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 34 |

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனக்கும், கடவூர் வட்டாட்சியருக்கும் இவ்வழக்கில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. நான் கடவூர் வட்டாட்சியர் சார்பாக சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு அழைப்பாணையில் கேட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். அந்த ஆவணங்களின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கீழப்பகுதி கிராமத்தில் உள்ள நிலங்களுக்கான பைமாஸ் எண் எந்த வருடம் சர்வே எண்ணாக மாற்றம் செய்யப்பட்டது என்றால் 1932 ம் வருடம் மாற்றம் செய்யப்பட்டது. நிலவுடைமை மேம்பாட்டு திட்டம் எப்போது நடைபெற்றது என்றால் 1985 ல் நடைபெற்றது. தற்போது எங்கள் அலுவலகத்தில் நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு பின்னிட்டு ஆவணங்கள்தான் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான்.

2) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.20 எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறதா என்றால் இல்லை, அது திருச்சி மாவட்டத்துடன் இருந்த போது பராமரிக்கப்பட்ட ஆவணம் ஆகும். தற்போது இவ்வழக்கு சொத்திற்கான ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன். கீழப்பகுதி கிராமத்தில்

பட்டா நிலம், மானிய நிலம் என தனித்தனியாக நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 598ல் 2.23 ஹெக்டேர் நிலம் உள்ளது. சர்வே எண் 598 ரயத்துவாரி நிலமா என்றால் ஆமாம். மானிய நிலங்கள் ரயத்துவாரியில் வராது என்றால் சரிதான். ஏதாவது ஏழை விவசாயிகளுக்கு நிலங்கள் கொடுக்கும் திட்டம் கொண்டு வந்தால் அப்போது மானிய நிலங்கள், ரயத்துவாரியில் பட்டா கொடுக்கப்படும், சர்வே எண் 598 மானிய நிலமாக இருந்து, ரயத்துவாரிக்கு மாறவில்லை என்றால் 1985 பதிவேட்டின்படி மாறவில்லை.

3) புல எண் 42/2 மானிய நிலமா என்றால் இல்லை, ரயத்துவாரி நிலம். சர்வே எண் 160/1 ரயத்துவாரி புஞ்சை நிலம். சர்வே எண் 406/1 ரயத்துவாரி நிலம் ஆகும். சர்வே எண் 412/1 அரசு புறம்போக்கு வண்டிப்பாதை ஆகும். சர்வே எண் 520/3 என்பது சர்வே எண் 520/3எ, 520/3பி, 520/3சி என உட்பிரிவாகியுள்ள ரயத்துவாரி நிலமாகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணத்தில் மேற்படி 5 சர்வே எண்களும் ஊழிய மானிய நிலமாக இருந்து, ரயத்துவாரியாக மாற்றப்பட்டதற்காக எங்கள் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால், அதற்கான பதிவேடு என்னிடம் இல்லாததால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. எங்கள் கிராம நிர்வாக அலுவலகத்திலோ, வட்டாட்சியர் அலுவகத்திலோ பைமாஸ் பதிவேடு உள்ளதா என்றால் இல்லை, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தான் இருக்கும்.

4) எங்களுக்கு அழைப்பாணை வந்த பின்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மேற்படி பைமாஸ் பதிவேட்டை பார்த்தோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.21 தான் மேற்படி பைமாஸ் பதிவேடா என்றால் இல்லை. நான் நேரடியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மேற்படி பதிவேட்டை பார்த்தேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.21 ஆவணத்தின்

அசலை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் கொண்டு வந்துள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்பந்தப்படாதவை என்றால் சரியல்ல. பைமாஸ் பதிவேட்டில், பைமாஸ் எண்ணிற்கான பட்டா எண் குறிப்பிடப்பட்டிருக்குமா என்றால் அதுபற்றி தெரியவில்லை.

**<u>11 முதல் 25 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ளபடிதான் பைமாஸ் 95, 145, 147, 240ற்கான சர்வே எண்கள் 220, 528, 529/1, 230/2 உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். தாவா சொத்திற்கான சிட்டா, அ பதிவேடு எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்திற்கான பைமாஸ் எண் சா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ளதை தவிர வேறு ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண் 598 யார் பெயரில் உள்ளது என்றால் பட்டா எண் 1142 ஆர்.ராமானுஜம் மற்றும் 5 நபர்கள் பெயரில் ரயத்துவாரி புஞ்சை நிலமாக உள்ளது. அதன் விஸ்தீரணம் 2.83 ஹெக்டேர். தாவா சொத்திற்கான அடங்கல் கொண்டு வந்துள்ளேனா என்றால், எனது அழைப்பாணையில் குறிப்பிடாததால் அதை கொண்டு வரவில்லை.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**